**யடிநுவர பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2020 மே 15 மற்றும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஜுன் 30 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக் கூற்றுகளின் 2019 திசெம்பர் 31 இல் யடிநுவர பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | காணி மற்றும் கட்டிடங்கள் 04 அலகுகளின் பெறுமதி ரூபா 1,648,500 கூடுதலாக குறிப்பிடப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | 2020 ஆண்டில் ஜர்னல் குறிப்பினூடாக சரி செய்கிறேன். |
| (ஆ) | ரூபா 309,200 பெறுமதியான 03 இயந்திர உபகரண உருப்படிகள் கணக்கிடப்பட்டிருக்கவிலலை. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | 2020 ஆண்டில் ஜர்னல் குறிப்பினூடாக சரி செய்கிறேன். |

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்கள் பிரகாரம், 02 கணக்கு விடய மீதிகள் மற்றும் துணை பதிவேடுகளிற்கிடையில் ரூபா 308,830 ஆன இணங்காமை நிலவியது. | வித்திதயாசத்திற்கான சீராக்கம் செய்யப்பட வேண்டும். | எதிர் காலத்தில் வித்தியாசத்தை இனங்கண்டு சரி செய்கிறேன். |

**1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) பெற வேண்டிய கணக்குகள்** | | |
| 05 ஆண்டுகளை விஞ்சியிருந்த கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 2,436,390 ஆனது. | பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும் | எதிர் காலத்தில் அறவிடுவதற்கான செயற்பாடுகளை மேற்கொள்கிறேன். |
| **(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்** | | |
| 05 ஆண்டுகளை விஞ்சியிருந்த செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 1,720,914 ஆனது. | கொடுப்பனவுகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் | எதிர் காலத்தில் கொடுப்பனவுகளை தீர்க்க நடவடிக்கை எடுக்கிறேன். |

**1.3.4 கணக்காய்விற்கு தேவையான எழுத்து மூல சான்றுகளின்மை**

தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 9,723,640 ஆன 02 கணக்கு விடயங்களிற்கான நிலையான சொத்து பதிவேடு, உறுதிகள் மற்றும் துணை ஏடுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்படும் மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகளை சமர்பிக்க வேண்டும். | 2020 ஆண்டில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

**1.3.5 இணங்காமை**

**1.3.5.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதி கோவை | | | |
| 218 பிரிவு | அனைத்து காணி மற்றும் கட்டிடங்களையும் வருடாந்தம் பரிசோதிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறித்த விதி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | தற்போது தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை<br>------------------------------- | | | |
| (i) | நி.பி. 371(2)(இ) | பெறுமதி ரூபா 604,386 ஆன 50 நிமித்த உப கட்டுநிதிகள் 08 தினங்கள முதல் 158 தினங்கள் வரையான காலமொன்று தீர்க்கப்படாது கையிறுப்பில் காணப்பட்டன. | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர் காலத்தில் குறித்த விடயங்கள் முடிந்தவுடனே தீர்க்குமாறு அறிவூட்டப்பட்டுள்ளது. |
| (ii) | நி.பி. 570 | ரூபா 4,351,311 பெறுமதியான காலாவதியான வைப்புக்களை விடுவிக்க அல்லது அரச வருமானத்திற்கு எடுக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர் காலத்தில் குறித்த நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கிறேன். |
| (iii) | நி.பி. 571 இன் (03) பிரிவு | ரூபா 2,195,006 ஆன தற்காலிகமாக வைத்துக் கொள்ள வேண்டிய வைப்புக்கள் 01 முதல் 05 ஆண்டுகள் வரையான நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டிருந்தன. | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் வைப்புக்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |
| (இ) | ஏனைய சுற்றறிக்கைகள்<br>------------------------------------- | | | |
| | 1996 ஆகஸ்ட் 06 திகதி 935/06 இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1986 நகர அபிவிருத்தி அதிகாரசபையின் திட்டம் மற்றும் கட்டிடங்களின் 22(1) கட்டளை. | உப பகிர்வின் பின் உரித்தான 04 காணி துண்டுகள் குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்படவில்லை. | சொத்துக்களிலிருந்து உச்ச பயனை பெற்றுக் கொள்ள வேண்டும். | எதிர் காலத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துகிறேன். |

### 1.3.6 போதிய அதிகாரத்தால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மமா/உ.ஆ.ஆ/சுற்றறிக்கை இல 2018/08 பிரகாம், உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் முன்கூட்டிய அங்கீகாரமின்றி மற்றும் தாபன விதிக் கோவை VIII அத்தியாயத்தின் 10.1(அ) பிரகாரம், 08 மணித்தியாள சேவை காலத்தை சரியாக உறுதி செய்து கொள்ளாது மீளாய்வாண்டில் ரூபா 116,343 விடுமுறை தின சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது. | விடுமுறை தின சம்பளம் கொடுப்பனவு செய்கையில் குறித்த சுற்றறிக்கை, ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். | உள்ளூராட்சி மன்றங்களின் உத்தியோகபூர்வ காாலம் முடிவடைந்ததனால், நிறுவன தலைவராக தவிசாளரின் அங்கீகாரத்தின் கீழ் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 39,179,167 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 36,551,386 ஆனது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் குத்தகை | 3,469,560 | 3,666,679 | 3,149,162 | 3,383,477 | 3,469,560 | 3,461,239 | 3,063,107 | 2,944,787 |
| (ii) | வாடகை | 298,000 | 339,228 | 328,228 | 11,000 | 250,000 | 201,665 | 201,665 | ---- |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 2,650,000 | 2,144,802 | 2,144,802 | ---- | 1,400,000 | 1,558,800 | 1,558,800 | 11,145 |
| (iv) | ஏனைய வருமானம | 53,191,000 | 51,760,255 | 78,340,965 | 82,025,600 | 46,450,000 | 38,038,405 | 9,694,359 | 94,478,179 |
| | கூட்டுத் தொகை | 59,608,560 | 57,910,964 | 83,963,157 | 85,420,077 | 51,569,560 | 43,290,109 | 14,517,991 | 97,434,111 |

### 2.2.2 வீத வரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வீத வரி | | |
| மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 2,814,428 ஆன வீத வரி மீதியொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது. | நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர் காலத்தில் அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |

### 2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 திகதிக்கு பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 286,361 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 16,709,508 ஆனது. | கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர் காலத்தில் அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்கள் நலன், இலகு மற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(அ) வேலைகள் மேற்கொள்வதன் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில், பொது மக்கள் தேவைகளின் படி, மேற்கொள்ள அங்கீகரிக்கப்பட்ட ரூபா 14,306,000 பெறுமதியான 92 வேலைகளில் ரூபா 8,831,000 பெறுமதியான 58 வேலைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட வேலைகளை செயற்படுத்த வேண்டும். | எதிர் காலத்தில் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

**3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1992 பெப்ரவரி 26 திகதிய நகர அபிவிருத்தி அதிகாரசபை பணிப்பாளர் நாயகத்தின் இலக்கம் 05/01/119 பரிமாணம் ix இன் (1) பிரிவு பிரகாரம், திட்டமிடல் குழு கொடுப்பனவு செலுத்துகையில், அலுவலக நேரத்திற்கு புறம்பாக 02 மணித்தியாளங்களிற்கு விஞ்சிய காலம் காப்களிக்க வேண்டிய போதும், அக்காலத்தை எழுத்து மூலம் உறுதிப்படுத்திக் கொள்ளாது மீளாய்வாண்டில், ரூபா 81,000 கொடுப்பனவாக செலுத்தியிருந்தது. | குறித்த கொடுப்பனவை மேற்கொள்ள முன் சுற்றறிக்கை தேவைப்பாடுகளுக்கு இனங்குகின்றனவா , என பரீட்சிக்க வேண்டும். | வரவு பதிவேடு, வெளியேறும் பதிவேடு, விரல் அடையாள இயந்திரம் ஊடாக வரவு, வெளியேறல்களை உருதி செய்து கொண்டதாகவும், எதிர் காலத்தில் விரல் அடையாள இயந்திரத்தை மாத்திரம் பயன்படுத்துவதாகவும் அறிவிக்கிறேன். |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஊழியர் வெற்றிடமும் மிகையும் | | |
| 2019 திசெம்பர் 31 திகதி சபையின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையினுள் 14 வெற்றிடங்கள் நிலவின. | வெற்றிடங்களை நிரப்பிக் கொள்ள வேண்டும். | எதிர் காலத்தில், ஆட்சேர்க்க தேவையான நடவடிக்கைகளை எடுக்கிறேன். |

**3.4 செயற்பாட்டு வினைத்திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 மற்றும் 2019 ஆண்டுகளில் கிடைத்த அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பான 179 முறைப்பாடுகளில் 48 முறைப்பாடுகளிற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அனுமதியற்ற நிர்மாணங்கள் பற்றிய முறைப்பாடுகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | அதிகமான முறைப்பாடுகள் தபால் மற்றும் தொலைபேசி மூலம் கிடைப்பதுடன், தகவல்கள் இல்லாததனால் நடவடிக்கை எடுக்க முடியாதுள்ளது என அறிவிக்கிறேன். |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 சொத்துக்களிலிருந்து கிடைக்க வேண்டிய வருமானம் பெறப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 07 பொதுக் கிணறுகள் எவ்வித பயன்பாட்டிற்கும் | சொத்துக்களிலிருந்து உச்ச பயனை பெற்றுக் | உள்ளூராட்சி திணைக்களத்திடம் |

| | | | |
|---|---|---|---|
| | எடுக்கப்படாது மூடப்பட்டிருந்தன. | கொள்ள வேண்டும். | விசாரித்துள்ளதுடன், கிடைக்கும் ஆலோசனையின் படி எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கிறேன். |

**3.5.2 விளைவற்ற/ குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 14,690,122 பெறுமதியான 07 வாகனங்கள் விளைவற்று மற்றும் குறைபயன்பாட்டுடன் நிலவின. | சொத்துக்களிலிருந்து உச்ச பயனை பெற்றுக் கொள்ள வேண்டும். | சாரதிகள் இல்லாததால் வாகனங்கள் அப்பறப்படுத்தி வைக்கப்பட்டுள்ளன. |
| (ஆ) | ரூபா 802,000 பெறுமதியான இலக்க தட்டுகளை இனங்காண முடியாத 05 டேலர்கள் வேலை அலகினுள் 10 வருட காலமாக துருப்பிடிகக இடமளிக்கப்பட்டிருந்தன. | பயன்படுத்த முடியாத சொத்துக்களை இனங்கண்டு முன் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர் காலத்தில் ஏலத்தில் விற்க அல்லது பராதீனம் செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (இ) | சியம்பலாங்கொட வேலை அலகு அமைந்துள்ள காணியிலுள்ள கட்டிடம் பழுதுபார்ப்பின்றி குறைபயன்பாட்டுடன் நிலவியது. | சொத்துக்களை பராமரிக்க வேண்டும். | எதிர் காலத்தில் பழுதுபார்த்து பயன்படுத்துகிறேன். |

**3.6 வாகனங்களின் பயன்பாடு**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 திசெம்பர் 29 திகதி 30/2016 இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை 3.1 பிரிவின் பிரகாரம், சில வாகனங்களின் எரிபொருள் பாவனை பரிசோதிக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர் காலத்தில் எரிபொருள் பயன்பாடு தொடர்பாக பரிசோதனை மேற்கொள்கிறேன். |
| (ஆ) | ரூபா 1,275,000 பெறுமதியான 02 வாகனங்களின் வருமான அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை. | வருமான அனுமதிப்பத்திரம் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும். | வாகனங்கள் செயலற்று நிலவுவதால், அனுமதிப் பத்திரம் பெற நடவடிக்கை எடுக்கவில்லை என அறிவிக்கிறேன். |

**4. கணக்கீடும் நல்லாளுகையும்**

**தீர்க்கப்படாத அவதானங்களும் பதில் கிடைக்காத கணக்காய்வு ஐயவினாவும்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 - 3.5 | | |
| 252 – 6349 இலக்க கெப் வண்டியின் என்ஜினை மாற்றுவது தொடர்பான விடயங்களை பரீட்சித்து அதற்காக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பரீட்சித்து தொடர்புடைய நடவடிக்கை எடுக்க வேண்டும். | மாகாண இயந்திர பொறியியலாளரினால் பரிசோதனை மேற் கொள்ளப்பட்டுள்ளதுடன், அறிக்கை கிடைத்ததும் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |